கோவை - சென்னை - மதுரையில்

ரூ.26 கோடி மதிப்பீட்டில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள்!

பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் தகவல்!

சென்னை, டிச.11- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்கேள்விக்குபதிலளிக்கையில் அமைச்சர் கீதா ஜீவன் கோவை, சென்னை, மதுரையில் 'தோழி பணிபுரியும், மகளிர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இது குறித்து விவாதம் வருமாறு:

வி.பி.கந்தசாமி: சூலூர் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் பி. கீதா ஜீவன்: முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி தோழி தங்கும்விடுதிகள், முன்னேறும்மகளிரின்முகவரிஎன்ற அடையாளத்துடன், பாதுகாக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன், தமிழகமெங்கும் மகளிர் விடுதிகள் நிறுவப்பட்டு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் பூமார்க்கெட்பகுதியில்அரசு பணிபுரியும் மகளிர் விடுதி 2013 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் 50 படுக்கை வசதிகள் இருக்கின்றன.தற்போது14பணிபுரியும் மகளிர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர். மேலும், இவ்விடுதியில் மேம்படுத்தப்பட்ட வசதியினைஅளித்து, மறுசீரமைப்பு செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் கோயம்புத்தூர்கவுண்டம்பாளையம்பகுதியில்மறுசீரமைக்கப்பட்ட விடுதியான, தோழிதங்கும்விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர கோயம்புத்தூரில் மற்றொரு பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுவதற்கு...

2024-2025 ஆம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையில்நம்முடைய முதலமைச்சர் அவர்களால் நிதி யொதுக்கப்பட்டு, 200படுக்கைகள் கொண்ட மகளிர் விடுதி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில்மொத்தம்266தனியார் பணிபுரியும் மகளிர் விடுதிகள்செயல்பட்டுவருகின்றன. அதில் சூலூர் தொகுதியில் 15 தனியார் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட விடுதிகளில் பணிபுரியும்மகளிர்பயனடைந்து வருகிறார்கள். ஆகவே, நம்முடைய சூலூர் தொகுதியின் தேவையறிந்து, அரசு, சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, தமிழ்நாடு பணிபுரியும்மகளிர்விடுதிகள்நிறுவனம்மூலம் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட அரசு பரிசீலிக்கும் என்பதைக் கூறி அமர்கிறேன்.

வி.பி.கந்தசாமி: என்னுடைய சூலூர் தொகுதிக்கு பணிபுரியும்மகளிருக்கான விடுதி அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் பி. கீதா ஜீவன்: சூலூர் தொகுதியில் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, பணிபுரியும் மகளிர் நிறுவனத்திற்கான இடத்தினைத் தேர்வு செய்து, நிச்சயமாக, மகளிருக்கான விடுதி அமைப்பதற்கான உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

வி.பி.கந்தசாமி: நம்முடைய அரசின் மூலமாக, சமூக நலத் துறையின் சார்பாக, பல இடங்களில் கோவை மாவட்டத்தில் மூன்றுஇடங்களில்மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்களிடத்தில் கட்டணமாக எவ்வளவுதொகைவசூலிக்கப்படு கிறது, அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சர் பி. கீதா ஜீவன்: 2024-2025ஆம்ஆண்டுநிதிநிலை அறிக்கையிலே கோயம்புத்தூர்,சென்னை, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சேர்ந்து 26 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, இந்த 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகளில், biometric நுழைவு, அதாவது, அவரவர்கள், விரல் ரேகை வைத்தால்தான் உள்ளே நுழைய முடியும். கண்காணிப்புகேமரா, 24மணிநேரமும்பாதுகாப்புவசதிகள் செய்யப்பட்டுள்ளன. Wifi வசதி செய்து கொடுக்கப்பபட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், இணையதளத்தின்மூலம் முன்பதிவு, நம்முடையஊரிலிருந்தே, நம் கிளம்பி வரும் முன்னரே முன்பதிவு செய்து கொள்ளலாம். அதுபோல், கொதிநீர்கலன் வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. தினசரி அறை பராமரிப்பு மற்றும் சலவை இயந்திரம்,வாகனநிறுத்துமிடம், அவர்களுக்காகவே அவர்கள் சமைத்துக்கொள்ள விரும்பினாலும் அதற்கும் வசதி அளிக்கப்பட்டுள்ளது.அதேபோல்,அவர்கள் குழந்தைகளுடனும் அதிலே பெண்கள் தங்கிக் கொள்ளலாம். மாத வாடகை மட்டுமல்லாது, ஒரு நாள், இரண்டு நாள் என்ற வாடகையிலும் அவர்கள் தங்கிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் மகளிர் மட்டுமல்லாது, அரசு நுழைவுத் தேர்வுகள் மற்றும் ஏதேனும் நேர்காணலுக்காக வரக்கூடிய பெண்கள்கூட இதனைப் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக அத்துணை வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

சென்னையைப் பொறுத்தவரை ஒரு தனி நபருக்கானமாதவாடகை ரூ.6500. இருவர் பங்கிட்டுக் கொள்ளும் அறையெனில் ரூ.5400, நால்வர் பங்கிட்டுக்கொள்ளும் அறையெனில் ரூ.4500, ஆறுபேர் பங்கிட்டுக் கொள்ளும் அறையெனில் ரூ.4000மாதவாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இந்தியாவிலேயே குடிமைப் பொருட்கள் வழங்குவதில்

தமிழ்நாடுதான் சிறப்பாக செயல்பட்டு வருகிறது!

சட்டப்பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமிதம்!



சென்னை, டிச.11- இந்தியாவிலேயே குடிமைப் பொருட்கள் வழங்குவதில் தமிழ்நாடு தான் சிறப்பாகசெயல்பட்டுவருகிறது என்று பேரவையில் கேள்வி நேரத்தில் உறுப்பினரின்கேள்விக்குபதிலளிக்கையில்அமைச்சர்கே.ஆர். பெரியகருப்பன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

பெ.பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மேலூர் தொகுதி, கம்பூர் ஊராட்சி, சின்ன கற்பூரம்பட்டிகிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன்: மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி கம்பூர் ஊராட்சிக்குட்பட்ட ஏ 3098 கேசம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பெரியகற்பூரம்பட்டி முழு நேர நியாயவிலைக் கடையிலிருந்துபுதியபகுதிநேரநியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: சின்ன கற்பூரம்பட்டி, கோவில்பட்டி, பெருமாக்கிபுதூர் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களின்நலன்கருதிசின்னகற்பூரம்பட்டிபகுதியில்பகுதிநேர நியாய நிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்: ஏ3098 கேசம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கட்டுபாட்டின்கீழ், பெரிய கற்பூரம்பட்டி முழுநேர நியாயவிலைக் கடை 567 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சின்ன கற்பூரம்பட்டி கிராமத்தில் 282 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை பிரிக்கப்பட்ட பின்னர், தாய் கடையில்285குடும்பஅட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய் கடைக்கும்,புதியபகுதிநேரநியாய விலைக் கடைக் கோரும் சின்ன கற்பூரம்பட்டி கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம்½கி.மீ.தான்.எனவே, அரசுஆணையின்படி,தாய் கடைக்கும்புதியபகுதிநேர கடைக்கும் இடையே 1.5 கி.மீ. தூரமும், பகுதிநேர கடை பிரிக்கப்பட்ட பின், தாய் கடையில் குறைந்த பட்சம் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனை களையும் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால் சின்ன கற்பூரம்பட்டியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

பெ.பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மேலூர் தொகுதியில் நரசிங்கம்பட்டி ஊராட்சியில் களிங்கம்பட்டி, பெருமாள்பட்டி, சின்ன பெருமாள்பட்டி, TVS காலனி ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் பயன் பெறும்வகையில் பெருமாள்பட்டியில் ஒரு பகுதிநேர நியாய நிலைக் கடையும், கீழவளவு ஊராட்சி குளிச்செவல்பட்டி கிராமத்திற்கும், மணப்பச்சேரி ஊராட்சி, காரியண்டல்பட்டி கிராமத்திற்கும், கிடாரிப்பட்டி ஊராட்சி தேர்குண்டம்பட்டி கிராமத்திற்கும், கொங்கம்பட்டி ஊராட்சி பன்னிவீரன்பட்டிகிராமத்திற்கும், தமிழக அரசு நிபந்தனை களை தளர்த்து பகுதிநேரநியாயநிலைக்கடை அமைக்கஅரசுஆவனசெய்யுமா?

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் இந்தியாவில்இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலும்தமிழகம்தான் குடிமைப் பொருட்கள் வழங்குவதில், குறிப்பாக மக்களுக்குஎந்தவிதஇடையூறும் இல்லாத அளவில், சுலபமாக மக்கள் சென்று வாங்கக்கூடிய அளவிற்கு வழிவகைசெய்திருக்கிறது. மேலும், முதலமைச்சர் அவர்கள், மக்களுடைய நலனில் அக்கறையோடு, இந்தத் திட்டத்தை சிறப்பாக செய்திட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 34,793 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன.இதில்26,347முழு நேர நியாயலைக் கடைகளும், 8,446 பகுதிநேர நியாயநிலைக்கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தஅரசுபொறுப்பேற்ற பிறகு,இதுபோன்றமக்கள் பிரதிநிதிகளுடையகோரிக்கைகளை ஏற்று, 544 புதிய முழுநேர நியாயவிலைக் கடை களும், 1,126 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டு, இது வரையில் 3 ½ ஆண்டு காலத்தில் மொத்தம் 1,670 நியாய விலைக் கடைகள் புதிதாக துவங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளில் தேவை ஏற்படின் அவற்றை உரிய முறையில் ஆய்வு செய்து, நிச்சயமாக பொதுமக்களுக்கு நன்மை பயக்கின்ற காரியங்களை இந்த அரசு நடத்தித் தரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

புயலால் பாதிக்கப்பட்ட சிலரை வீட்டுக்கு அழைத்து

'உதவி' என்ற பெயரில் சினிமா சூட்டிங்போல் செயல்படுபவர் தி.மு.க.வை விமர்சிப்பதா?

கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேச்சு!

சென்னை, டிசம்பர். 11- சென்னை அண்ணாநகர் மேற்கு விரிவு ஏசியாட் காலனியில், பகுதி இளைஞரணி சார்பில் நடைபெற்ற மனிதநேய உதயநாளில், அம்பத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் என்.பி.எம். வசந்த்தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கே. சேகர்பாபு ஏற்பாடு செய்த மரக்கன்று நடும் விழா, நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் கலந்து கொண்டு தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசியதாவது:

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது மகன் உதயநிதியை துணை முதல்வராக்கியதன் மூலம் மன்னராட்சி தொடர்கிறது. அது கூடாது என்று சுரண்டல் லாட்டரிகாரர் பேசி இருக்கிறார். முதல்வர் தளபதி மனம் உவந்து உதயநிதியை துணை முதல்வராக்கும் இந்த முடிவை எடுக்கவில்லை.சட்டமன்றதேர்தலில் மிக அதிகமான வாக்குகளில் வென்றபோதும் உதயநிதியை உயர்த்தவில்லை. தமிழ்நாட்டில் உள்ள 72 மாவட்ட கழகங்களும் தீர்மானம் போட்டு, பொதுக்குழு, செயற்குழுவில் ஆதரவாக குரல் எழுப்பியதை பார்த்து, தாமதமான தீர்ப்பு தோல்விக்கு சமம் என்பதால் வேறு வழி இல்லாமல் துணை முதல்வராக்கினார்.

மன்னர் ஆட்சிஎன்கிறாயே, தலைவர்கள் அடையாளம் காட்டியஎல்லோரும்தலைவர் ஆனார்களா? தந்தை பெரியார் மணியம்மை அம்மையாரை காட்டுவாரோஎன்கிறசூழலில் பேரறிஞர் அண்ணா உருவானார்.

ஆந்திராவில் சிவபார்வதியை என்.டி.ராமாராவ் அடையாளம் காட்டும் போது, சந்திரபாபு நாயுடு வந்தார். மாராட்டியத்தில்சுப்பீரியா என்கிறதன் மகளைசரத்பவார் காட்ட முன்வரும்போது, அஜித்பவார்வந்தார். பால்தாக்கரே மகன் உத்தவ்தாக்கரே வரும்போது தவறே ஆனால் ஏக்நாத் ஷிண்டே வந்தார். எம்.ஜி.ஆர். எந்த ஜெயலலிதா வரக்கூடாது என்று தொலைபேசி தொடர்பை எல்லாம் கட் பண்ணி ஒதுக்கினாரோ அந்த அம்மையார், எம்.ஜி.ஆர். விரும்பிய ஜானகி அம்மையாரிடமோ. ஆர்.எம்.வீயிடமோ போகாமல்தடுத்துஜெயலலிதா புகுந்தார். பிறப்பது மட்டும் போதாது. உழைத்து தொண்டர்கள் இதயத்தில் இடம்பிடிக்க வேண்டும்.

ஜம்மு காஷ்மீரில் ஷேக் அப்துல்லா, பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா வரலாம். உத்திரபிரதேசத்தில் முலாயம்சிங், அகிலேஷ் வரலாம். பீகாரில் லல்லு, ராப்ரிதேவி, தேஜஸ்விவரலாம். ஆந்திராவில்என்.டி.ஆருக்குசந்திரபாபு நாயுடு வரலாம். கர்நாடகாவில் பொம்மை மகன் பொம்மை முதல்வராகலாம், தேவகவுடா. குமாரசாமி, பேரன் என வரலாம். எடியூரப்பா மகன் பா.ஜ.க. தலைவர் ஆகலாம். அமெரிக்காவில் அதிபர் புஷ் மகன் புஷ் அதிபராகலாம். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். மனைவி, துணைவிஎன முதல்வராகலாம். அன்புமணி ராமதாஸ், சௌமியாவரலாம். விஜயகாந்த், பிரேமலதா அவர் மகன் வரலாம், மூப்பனார், அவர் மகன் வாசன் வரலாம். அரசியல்வாதி மகன் அரசியல்வாதி ஆகக்கூடாது என்றால் அரசியல் ஆரம்பிக்க முதன்முதலில் அன்னை சோனியா ஈன்ற ராகுலைநடிகர்விஜய்சந்தித்தது ஏன்?

அரசியலுக்கு தியாகமும், அனுபவமும்தான் முக்கியம். நடிப்பது அரசியலுக்கு விசா அல்ல. பொறுமை அவசியம்.

மக்களிடம் கொள்ளை அடித்த பணம். குஷ்டரோகி கரங்களில் உள்ள வெண்ணெய்க்கு சமம் என்றார் பேரறிஞர் அண்ணா. அது திருடினாலும், சுரண்டல் லாட்டரியானாலும், கள்ளச்சாராயம் ஆனாலும் ஒன்றுதான்.

சிலசமயம் நாய் விற்ற காசு குரைக்காது. பாவக்காய் விற்ற காசுகசக்காது. காசுக்குசரிதலைமைக்கு சரியாகுமா?

மன்னராட்சி வேண்டாம் என்று சொல்லுபவர், குறுக்கு வழியில்பணத்தைசம்பாதித்து, ஏழு ஆயிரம் கோடி வழக்கில் சிக்கி இருக்கும் ஒருவர் குறுக்கு வழியில் துணைப்பொதுச்செயலாளர் ஆகலாமா? எப்போதுநீ அரசியலுக்கு வந்தாய்?

வரும் 2024-ல் நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வுக்கு 25 சீட் தமிழ்நாட்டில் கிடைக்கும், அதிலிருந்து 5பேர் ஒன்றிய அமைச்சர் ஆவார்கள் என்று சொல்லிவிட்டு 19 இடத்தில் டெபாசிட் போன சூழலில் அண்ணாமலை பேசியதுதான் ஆணவபேச்சு.

பிறந்தகுழந்தை, 6மாதத்தில் 'எனக்கு திருமணம் செய்து வைத்தால் பாதி நாள் உனக்கு வருமானத்தில்பங்குதருவேன்' என்பது போல.

கட்சிஆரம்பித்த ஆறுமாதத்தில் "ஆட்சியில் பங்கு தருகிறேன் வாருங்கள்" என்று பேசுவதுதான் ஆணவம்.

இல்லாததைதருகிறேன்என்பானாம். இருப்பதை கேட்டால் தரமாட்டானாம்.

தன்னிடம் இருக்கிற பணத்தைமக்களுக்குபுயலுக்கு. வெள்ளத்துக்கு தரமாட்டாராம். 200 பேரை வீட்டிற்கு வரவைத்து அரிசி பருப்பு கொடுப்பாராம். இது என்ன சினிமா ஷூட்டிங்குன்னு நினைக்கிறாயா? பல லட்சம் பேரு பாதிப்பு. இவரு இருநூறு நபர்களுக்கு நலத்திட்டம் கொடுத்திட்டு, புத்தக விழாவுக்கு சென்ற இடத்தில் குத்தாட்டம்டான்ஸ்போட்டுட்டு வந்திடுவாராம்.

உன் கூட்டணிக்கு வரனு முன்னாமுதலில்உன்இருப்பை காட்டு. அகரம்கூட அறியாதநீ தளபதி என்கிற சிகரம் இடத்துக்கு வருவதற்கு ஆசைப்படலாமா?

எம்.ஜி.ஆர். கூட திண்டுக்கல்லில், பாண்டியில், கோவையில், நாடாளுமன்ற தேர்தலில்தன்பலத்தைகாட்டினார். அப்படி இருந்தும் 1977 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.விடம் செல்லாத ஜனதா, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கூடஎம்.ஜி.ஆரிடம்வரவில்லை. 1980-ல் காங்கிரஸ், தி.மு.க.விடம்தான் சென்றது.

நாடாளுமன்றத்தில்வெற்றி கண்ட எம்.ஜி.ஆரிடம் சட்டமன்ற தேர்தலுக்கு ஒன்று சேர்ந்திட வரவில்லை. நீ இன்னும் தவழவே இல்லை. உன்னிடம் வெற்றிக் கூட்டணியிலிருந்து எவனாவது வருவானா? வரா விட்டால் அய்யோ தி.மு.க. தடுக்கிறதுஎன்றுகூச்சலிட்டால் நகைப்பானே தவிர திகைக்க மாட்டான்.

எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பிக்கும்போது 20 ஆண்டு காலம் தி.மு.க.வில் பணியாற்றி ஆட்களையும், அனுபவத்தையும் எடுத்துக் கொண்டு சென்றார்.

அவர் பின்னே நாஞ்சிலார், கே.ஏ.கே., எஸ்.டி.எஸ். ஆர். எம்.வீ. காளிமுத்து, 14 எம்.எல்.ஏக்கள், இரண்டு, மூன்று எம்.பிக்கள் ஒரு கூட்டம் சென்றது.

விஜயகாந்திடம் முன்னாள் அமைச்சர்கள் கு.ப. கிருஷ்ணன், பண்ருட்டியார் என ஒரு பட்டாளம். பொன்னுசாமி,

திருநாவுக்கரசரின்போட்டி அ.தி.மு.க.வில் 8 எம்.பி. 3 எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் எஸ்.டி.எஸ். அரங்கநாயகம், கண்ணப்பன். தென்னவன், முத்துசாமி இருந்தனர்.

உங்கள்பின்னால்இதுவரை ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட வரவில்லை. ஒரு சட்டமன்றஉறுப்பினர்கூட உன்னை ஏற்காதபோது, டி.இராஜேந்தர், எஸ்.எஸ்.ஆர், மன்சூர் அலிகான் ஆகியோருக்கு ஏற்பட்ட நிலைதான் உனக்கு. இந்த சூழலில் இரண்டு எம்.பி, 4 எம்.எல்.ஏக்களை வைத்து அங்கீகாரம் பெற்ற திருமா உன்னிடம் எப்படிவருவார். எப்படிஉன்தலைமையை ஏற்பார்? கதிரவன் வெளிச்சத்தில் வாழ்பவரை காடா விளக்கு அழைத்தால் போவாரா?

இவ்வாறு கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசினார்.

கூட்டத்தில் 1000 நபருக்கு நலத்திட்டத்தைகாசிமுத்துமாணிக்கம் வழங்கினார். செடிகளை இந்துசமய அறநிலையத் துறை மற்றும் மாநகர விரிவாக்கத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஊன்றினார். சென்னை பெருநகர மேயர் பிரியா, சட்டமன்றஉறுப்பினர் ஜோஸப்சாமுவேல், பகுதிசெயலாளர்ராஜகோபால், வட்டாரதலைவர் மூர்த்தி, வட்ட செயலாளர்கள்நெப்போலியன், சீனிவாசன்மற்றும்பகுதிஇளைஞர் அணிஅமைப்பாளர்வசந்த்ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்கு பகுதி, 103அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் வழக்கறிஞர் அருள் கண்ணன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று உரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ச.பரமசிவம், தலைமை கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், இளம் பேச்சாளர் பூபதி, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர் வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, மாமன்ற உறுப்பினர் புஷ்பலதா ஜெய்சங்கர், மாநில நிர்வாகிகள் ராணி ரவிச்சந்திரன், எஸ்.ராம்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்த், மாவட்ட அமைப்பாளர்கள் ச.அசோக்குமார், வழக்கறிஞர் தேவேந்திரன், யோகேஸ்வரி சுந்தரேசன், திருமலை பொன்னுரங்கம் எம்.சி, டி.எஸ்.ராஜா, ரெங்கராஜன், வடக்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளுக்கு உட்பட்ட பகுதி/அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

த.விக்னேஸ்வரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் எஸ்.முரளி - நந்தனம் மதி முன்னிலையில்

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டி!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச. 11 சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிசார்பில்கழகஇளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கும் விழா இன்று (11.12.2024 புதன்கிழமை) காலை 10.00 மணியளவில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வழங்கும் விழா நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில்பகுதிக்கழகச் செயலாளர்கள் எஸ். முரளி, நந்தனம் கி.மதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், எஸ். உமாஷங்கர், டான்டி பிரகாஷ், எஸ்.அஸ்வின்குமார், பகுதி துணை அமைப்பாளர்கள் டி.ஜெகதீஷ் பாபு, தா. தீபன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில்சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமானமயிலைத.வேலுகலந்து கொண்டுமாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.தம்பிதுரை, எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், சி.தசரதன், டாக்டர் ஜெ.அருண், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், பாக்டர் கலைகதிரவன், சு.வில்லவன், செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளிஅ.பாபு, யோகேஷ், ரவி, வேலு, சம்பந்தம், பகுதிக் கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, சீமன்சேகர், எல்.உதயகுமார், ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர். எல்.வி.அசோக்குமார், பா. பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், வட்டக்கழகச்செயலாளர்கள் ஏ.தாஸ், மா. பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னு சாமி, டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் அ. ரேவதி, விமலா கிருஷ்ணமூர்த்தி, கீதா முரளி மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், இளைஞர் அணி தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னைதென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, 08.12.2024 – ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட தி.மு.கழகத்தின் சார்பில் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவுகள் வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சு.வில்லவன், பாக்கியதாஸ், க.கணபதி, மு.ஏ.முல்லைவேந்தன், எம்.கே.ஆலை ஆனந்த், தேனை பி.பார்த்திபன், எம்.உஷா, எஸ்.மாரிமுத்து, மு.குப்பன், தே.ஜெகநாதன், எஸ்.செல்வமணி, அ விஜயகுமார், WEFAS த.பத்மநாபன், அ.தேவேந்திரன், சு.தமிழ், ஜி.முத்து (எ) ராஜி, நா.உதயன், மெடிக்கல் கோபி, எஸ்.லதா, வசந்தா, செங்குட்டுவன், கே.பார்த்திபன், சி.பாலன், என்.முனீஸ்வரன், என்.மகேஸ்வரன், டி.குமார், பி.ஹாரி, வ.சிவா, அ.சதீஷ்குமார், ம.முருகன், வெங்கடேசன், லோகேஷ், பாலா மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, பி.எல்.ஏ.2, பி.எல்.சி நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.